# உற்பத்தியை உயர்த்தும் நெல் சாகுபடி திட்டம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

குறுவைப் பருவத்திற்கு தேவைப்படும் குறைந்த வயதுடைய நெல் ரக விதைகள், இர சாயன உரங்கள், உயிர் உரங்கள், பயிர்க்கடன் போன்ற இடுபொருட்களும் டெல்டா மாவட்ட உழவர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப் பட்டன.

இதன் விளைவாக கடந்த ஆண்டில் குறுவை நெல் சாகுபடி கடந்த 48 ஆண்டுகளில் இல்லாத மிகப் பெரிய சாதனையாக, 5.36 இலட்சம் ஏக்கரை கடந்து, 12.76 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்து, சாதனை படைத்தது.

நடப்பு ஆண்டில் கோடை பருவத்தில் பெய்த மழையினால், டெல்டா மாவட்டங்களில் நிலத் தடி நீர் கணிசமாக உயர்ந்தது. மேலும், சென்ற ஆண்டில் மேட்டூர் அணை நீரை மிகவும் கவ னமாக பயன்படுத்தியதன் காரணமாக, மேட் டூர் அணையின் நீர் இருப்பு தற்போது 103.35 அடியாக உள்ளது. எனவே மேட்டூர் அணை யினை குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12ஆம் நாளன்று திறப்பதற்கு நமது அரசு முடிவெடுத்தது.

நீர்வளத்துறை கடந்த இரண்டு ஆண்டு களைப் போலவே, டெல்டா பகுதிகளில் கால் வாய்களை தூர் வாரும் பணிகளை மேற் கொண்டது. இதற்கென நடப்பாண்டில் 90 கோடி ரூபாயை அரசு அனுமதித்து, இந்தப் பணி களை ஆய்வு செய்து விரைவாக முடிப்பதற்கு கண்காணிப்பு அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, முடுக்கிவிடப்பட்டதால், இந்தப் பணிகள் எல்லாம் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

இந்தப் பணியின் முன்னேற்றத்தினை நேர டியாக பார்ப்பதற்காக சில நாட்களுக்கு முன்பு நானும், நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர் களும், இன்னும் சில அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் தஞ்சாவூருக்கு நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டோம். மேலும், குறுவை நெல் சாகுபடி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து உழ வர்களுடன் கலந்துரையாடி உரிய விவரங் களை கேட்டு அறிந்து கொண்டோம்.

**உரிய காலத்தில் உரம் விநியோகம்!**

முன்னதாக வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களும், காவிரி டெல்டா மாவட்ட பகுதி உழவர்களுடன் கலந்துரையாடல் கூட் டத்தை நடத்தி, குறுவை நெல் சாகுபடியினை மூன்றாவது ஆண்டிலும் வெற்றிகரமாக மேற் கொள்வதற்கு ஆணையிட்டிருந்தேன்.

அதன்படி, தற்போது குறுவை நெல் சாகு டிக்கு தேவையான குறைந்த நாள் வயதுடைய நெல் ரக விதைகளும், இரசாயன உரங்களும், உயிர் உரங்களும் அரசு வேளாண்மை விரி வாக்கம் மையங்களிலும், தனியார் கடைகளி லும் இருப்பு வைக்கப்பட்டு, உழவர்களுக்கு உரிய காலத்தில் விநியோகிக்கப்பட்டன.

இதன் காரணமாக நிலத்தடி நீரை பயன் படுத்தி இதுவரை 1.6 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல்லில் நடவுப் பணி முடிவடைந்துள்ளது. மேலும், சமுதாய நாற்றங்கால் அமைத்து, காவிரி நதிநீர் வந்தவுடன், நடவுப்பணியினை உடனடியாக துவங்கும் வகையில் பணிகள் விரைவாக வேளாண்மைதுறையினால் முடுக்கி விடப்பட்டன. இந்நிலையில் இன்று (ஜூன் 12) மேட்டூர் அணையைத் திறந்து வைத்துள்ளேன்.

நமது அரசுப் பொறுப்பேற்று, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இன்று (12.6.2023), மேட்டூர் அணையினை உரிய காலத்திற்குள் நான் திறந்து வைப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், பாசன நீரினை டெல்டா மாவட்ட உழவர்கள் மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தி இடுபொருட்களை தேவையான அளவு உபயோகித்து, நடப்பு குறுவைப் பருவத் தில் நெல் உற்பத்தியை உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நமது உழவர்களுக்கு நடப்பாண்டில் ரூபாய் 75 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டத்தையும் இன்று நான் அறிவிக்கிறேன்.

**ரூ.75.55 கோடியில் குறுவை நெல் சாகுபடி திட்டம்!**

குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டம், 2023 என்ற இந்தத் திட்டத்தின்கீழ்,

*ஏக்கருக்கு 45 கிலோ யூரியா,

*50 கிலோ டிஏபி,

*25 கிலோ பொட்டாஷ் என்ற விகிதத்தில், 2.5 இலட்சம் ஏக்கருக்குத் தேவையான இரசா யன உரங்கள் முழு மானியத்திலும்,

*1.24 இலட்சம் ஏக்கருக்குத் தேவையான நெல் விதைகள் 50 சதவிகித மானியத்திலும்,

*மாற்றுப் பயிர் சாகுபடிக்காக 15,818 ஏக்க ருக்கு மாற்றுப் பயிர் சாகுபடித் தொகுப்பும்,

* 6,250 ஏக்கரில் பசுந்தாளுர விதைகளும்,

* 747 பவர் டில்லர்களும்,

*15 பவர் வீடர்களும் மானியத்தில் விநியோ கம் செய்வதற்காக, மொத்தம் ரூபாய் 75 கோடியே 95 லட்சம் மதிப்பில் குறுவை சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

எனவே, இந்த நல்ல வாய்ப்பினை பயன்ப டுத்திக் கொண்டு காவிரி டெல்டா உழவர்கள் அனைவரும் பாசன நீரை மிகவும் சிக்கன மாகப் பயன்படுத்தி, தேவையான அளவு இரசா யன உரங்களை உபயோகித்து, நெல் சாகுபடி யினை மேற்கொள்ளுமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு இன்று அறிவித்த குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தினால், நடப்பாண் டில் ஐந்து இலட்சம் ஏக்கருக்கும் அதிகமாக குறுவை நெல் சாகுபடி அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

உழவர்கள் மற்றும் வேளாண் தொழிலாளர் நலன் காக்க நம்முடைய அரசு எந்நாளும் தொடர்ந்து பாடுபடும் என்று மீண்டும் ஒரு முறை உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் பேட்டியளித்தார்.

---



கோவை சுந்தராபுரம் எல்.ஐ.சி. காலனி பகுதியில் வசித்து வரும் கழக வெளியீடு செயலாளர் ச.விடுதலை விரும்பியை – சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் ஆகியோர் அவரது இல்லத்திற்கு சென்று மரியாதை நிமித் தமாக சந்தித்து பேசினர். உடன் பொதுக்குழு உறுப்பினர் குறிச்சி பிரபாகரன், குறிச்சி தெற்கு பகுதி செயலாளர் கார்த்திகேயன், தெற்கு மண்டல தலைவர் தனலட்சுமி ரங்கநாதன், மாமன்ற உறுப்பினர் உதயகுமார், பகுதி துணைச் செயலாளர் சுரேந்திரன், வார்டு செயலாளர் குமரே சன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் இரா.விஜயராகவன், முகம்மது ஜின்னா, கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

---

## 2047- ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் பொருளாதாரம்?

2047 - ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த பொருளாதார நாடாக - உலக நாடுகளுள் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக மாறிவிடும் என்று பிரதமர் மோடி அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சி. ரங்கராஜன் அவர்களின் கருத்தோ வேறு விதமாக இருக்கிறது.

**“2047- ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த பொருளா தார நாடாக மாற வேண்டுமானால் அதிக முதலீடுகளை ஈர்த் திட வேண்டியது அவசியம்.**

**தற்பொழுது இந்தியாவில் தனிநபர் வருமானம் 2000 டாலர். தனிநபர் வருமானக் குறியீட்டில் இந்தியா 142 - ஆவது இடத்தில் இருக்கிறது.”**

**“ தனிநபர் வருமானம் 13,000 டாலராக உயர்ந்தால் மட்டுமே, இந்தியா வளர்ந்த நாடாக மாற இயலும்”**

என்று ரங்கராஜன் விளக்கி இருக்கிறார்.

அப்படியானால் இன்னும் 23 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் மேலும் அய்ந்தரை மடங்கு அதிகரிக்க வேண்டும்.

இந்தியா விடுதலை அடைந்து, கடந்த 77 ஆண்டுகளில் தனிநபர் வருமானமே 2000 டாலர்தான் என்பதைப் பார்க்கும்போது, அடுத்த 23 ஆண்டுகளில் - அதாவது 2047ல், இந்திய விடுதலையின் நூற்றாண்டில், - தனிநபர் வருமானம் 13,000 டாலர் என்ற மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட முடியுமா?

**எனவே பிரதமர் கூறிவருவது நனவாகுமா? கனவாகவே காற்றில் கரைந்து போகுமா ? நனவாகாதவற்றையே பிரதமர், நாட்டு மக்களிடம் சொல்லி வருகிறாரா? காலம்தான் சரியான பதில் சொல்ல வேண்டும் !**

---

பொய்யான செய்திகள் மூலம் சிதைக்கப்பட்டு - பகுத்தறிவிலிருந்து விலகி

## கல்வியை முற்றிலுமாக செயலிழக்கச் செய்துவிட்டது மோடி அரசு!

### என்.சி.இ.ஆர்.டி. உறுப்பினர்கள் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூன் 14 - பொய்யான செய்திகள் மூலம் அரசியல் அறிவியல் பாடங்கள் சிதைக்கப்பட்டு பகுத்தறிவுப் பாதையில் இருந்து விலகி, கல்வியை முற்றிலுமாக செயலிழக்கச் செய்துவிட்டது மோடி அரசு என்று கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற் சிக்கான தேசிய கவுன் சில் (என்.சி.இ.ஆர்.டி.) உறுப்பினர்களும் அரசியல் அறிவியல் பாடத்திட்ட தயாரிப்பாளர்களுமான சுஹாஸ் பால்ஷிகர் மற்றும் யோகேந்திர யாதவ் குறிப் பிட்டுள்ளனர்.

மேலும் அனைத்து அரசி யல் அறிவியல் பாடபுத்த கங்களில் இருந்தும் தங்கள் பெயரை நீக்கவும் அவர் கள் வலியுறுத்தியுள்ளனர்.

“கல்வி தேசியமயமாக் கல் என்ற பெயரில் நடை பெற்ற இந்த திருத்தத்தில் பகுத்தறிவு இல்லை; மாண வர்களுக்கான பாடத்திட் டத்தை வகுக்கும் குழு விலும் பகுத்தறிவு உள்ள வர்கள் இல்லை” என்று அவர்கள் சாடியுள்ளனர். இந்த திருத்தங்கள் மேற் கொள்வதற்கு முன் கருத் துக்கேட்போதகவல்களோ தெரிவிக்கவில்லை. மற்ற கல்வியாளர்களோடு ஆலோசனை கேட்கப் பட்டு இருந்தல் நாங்கள் இந்த முடிவை ஏற்றுக் கொண்டு இருக்க மாட் டோம் என்று, என். சி.இ.ஆர்.டி. இயக்குனர் தினேஷ் சக்லானிற்கு கொடுத்த கடிதத்தில் அவர் கள் தெரிவித்துள்ளனர்.

கல்வியாளரும் ஆராய்ச் சியாளருமான பால்ஷிகர் மற்றும் அர சியல் செயற் பாட்டாளரும் ஸ்வராஜ் இந்தியாவின் தலைவரு மான யோகேந்திர யாதவ் ஆகிய இருவரும் 2005 தேசிய கல்வித் திட்டங்கள் அமைப் பின் அடிப்படை யில் 9 முதல் 12 வகுப்பு வரையிலான அரசியல் அறிவியல் பாடத்திட்டத் தின் முதன்மை ஆலோசகர் களாக இருந்தனர்.

**கற்பிக்க முற்றிலும் பயனற்றது!**

“ஒவ்வொரு உரைக்கு பின்னும் ஒரு தர்க்கம் உள் ளது, பாடப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த நீக்கங்கள் அதிகாரத் தில் உள்ளவர் களை மகிழ் விப்பதைத் தவிர வேறு எந்த தர்க்கத்தையும் கொண்டிருக்க வில்லை. பாடப்புத்தகங்கள் மோச மான முறையில் சிதைக்கப் பட்டுவிட்டன. இது சமூக வியல் துறைகளில் படிக்கும் மாணவர்களின் விமர்சனம் மற்றும் கேள்வி கேட்கும் திறனை மட்டுப்படுத்தும். இந்த புத்தகங்கள் அரசியல் அறிவியல் மாணவர்க ளுக்கு அரசியல் கோட்பா டுகள் மற்றும் வரலாற்று ரீதியாக நடைபெற்ற அரசி யல் மாற்றங்கள் குறித்து கற்பிக்க முற்றி லும் பயனற் றது” என்று அந்த கடிதத் தில் அவர்கள் கூறியுள்ள னர்.

**பா.ஜ.க.வின் பொய் நிரூபணம்!**

கடந்த மாதம் என். சி.இ.ஆர்.டி. புத்தகங்களில் இருந்து இந்து முஸ்லீம் ஒற் றுமை குறித்து காந்தியின் பார்வை, அதைத் தொடர்ந்து இந்து தீவிரவா திகளால் காந்தி படு கொலை செய்யப்பட்டது, ஆர்.எஸ்.எஸ். மீதான தடை, இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத், விவசாயிகளின் போராட்டம் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை என். சி.இ.ஆர்.டி. நீக்கியது. மேலும், பா.ஜ.க. ஆட்சி யில் குஜராத்தில் நடை பெற்ற வன்முறை குறித் தான பகுதிகளும் நீக்கப் பட்டு, ஆர்.எஸ்.எஸ்.க்கு சாதகமான பாடத்திட்ட மாக மாற்றப்பட்டுள்ள செயலுக்கு நாடு முழுவ தும் பெரும் கண்டனங்கள் எழுந்த போது, “பகுத்த றிவு நடவடிக்கையின் ஒரு பகுதியாக நிபுணர்களின் ஆலோசனையோடுதான் இந்த திருத்தங்கள் மேற் கொள்ளப் பட்டன” என்று ஒன்றிய அரசு கூறியது. தற்போது இந்த கடிதத்தின் வாயிலாக அது பொய் என நிரூபணம் ஆகியுள்ளது.

மேலும் அந்தக் கடிதத் தில், “பாடப்புத்தகங்கள் தயாரிப்பதில் தொடர்பு டைய கல்வியாளர்கள் என்ற முறையில் உண்மை கள் சிதைக்கப்பட்ட இந்த பாடப்புத்தகங்களில் எங் கள் பெயர் இடம்பெறு வதை நாங்கள் விரும்ப வில்லை. பகுத்தறிவு முறை யில் என்று சொல்லிக் கொள்ள கூடிய இந்த பகுத்தறிவற்ற செயலில் எங்களது கருத்து வேறு பாட்டை நாங்கள் வெளிப் படையாக தெரிவித்துக் கொள்கிறோம்” என்றும் இந்த பாடப்புத்தகங்களில் இருந்து தங்களின் பெயரை நீக்கவும் வலியுறுத்தி யுள்ளனர்.

---

ஓராயிரம் அமித்ஷாக்கள் வந்தாலும்

## தமிழ்நாட்டு மக்களை அசைக்க முடியாது!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!


சென்னை, ஜூன் 14

சென்னை திரு.வி.க நகர் மண்டலத்திற்கு உட்பட்ட ஸ்டீபன் சாலை மேம்பால பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய் தார். இந்நிகழ்வில் சென்னை மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், திரு.வி.க.நகர் எம்.எல்.ஏ. தாய கம் கவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பேட்டி அளித்த அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியதாவது:

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொறுத்த வரை மழைக்கால தண்ணீர் பிரச்சி னையை தீர்ப்பதற்கான வசதி, அடிப்படை வசதிகள் பொழு துபோக்கு வசதிகள் என்று எதையும் திட்டமிடாமல் கடந்த ஆட்சி காலத்தில் பணி கள் மேற்கொள்ளப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அந்தப் பணிகளில் எல் லாம் சுவனம் செலுத்தி வருகி றோம்.

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள், பேருந்து



நிலையத்தைச் சுற்றி சாலை வச திகள், மழைநீர் தேங்காமல் இருக்க கால்வாய் வசதிகள், பொழுதுபோக்கிற்காக பூங்கா வசதிகள், மருத்துவ மையம், காவல் மையம், ஆம்னி பேருந்து நிலையத்திற்கு தனி யாக இடம் தேர்வு செய்து 5 ஏக்கர் பரப்பளவில் ரூ.30 கோடி செயவில் ஆம்னி பேருந்து நிலையத்திற்கு இடம் என பணிகள் நடைபெற்று வரு வதால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் பணிகளை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடித்து கிளாம்பாக்கம் பேருந்து நிலை யத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவோம்.

தமிழ்நாட்டில் முதலில் பா.ஜ.க. 25 தொகுதிகளில் போட்டியிடட்டும். அப்படி போட்டியிட்டாலும் தேர்த லுக்கான முன்வைப்பு தொகையை தக்க வைக்கவே பா.ஜ.க. போராடுவார்கள்.

ஒரு அமித்ஷா அல்ல; ஓரா யிரம் அமித்ஷா வந்தாலும் தமிழ்நாடு முதல்வர் செல்வாக் கையும், முதல்வர் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கை யையும், தமிழக மக்களையும் அசைத்துப் பார்க்க முடியாது.

இரண்டு தமிழர்கள் பிரதம ராவதை தி.மு.க. தடுத்ததாக அமித்ஷா கூறுகிறார். தமிழக முதல்வரும் தமிழர் தானே.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.

---



தஞ்சையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா – இலவச மருத்துவ முகாம் தஞ்சை மத்திய மாவட்ட மருத்துவ அணி சார்பில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

## சங்கராபுரம் முரசொலி முகவர் இல்ல மணவிழா!

கள்ளக்குறிச்சி, ஜூன் 14-

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் முரசொலி முக வர் பி.ராமுநீலா மகன் சரவ ணன், மண்டகப்பாடி சரவ ணன்கவிதா மகள் மகாலட்சுமி ஆகியோர் திருமணம் பகண்டை கூட்டு ரோட்டில் உள்ள தனி யார் மண்டபத்தில் நடைபெற்றது.

மணவிழாவிற்கு கள்ளக்கு றிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் கார்த்திகேயன் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த் தினார்.

விழாவில் தொழிலதிபர் ஹரி பிரசன்னா, திலகவதி நாக ராஜன், சென்னம்மாள் அண் ணாதுரை, பெருமாள், துரை முருகன், ஆறுமுகம், அசோக் குமார், ரோஜாமணி தாகா பிள்ளை, பகண்டை சப்இன்ஸ் பெக்டர்கள் சூர்யா, சோலை, ஜெயராமன், மற்றும் ஐயப் பன், முகமது ரபிக், நவாஸ் கான், வசந்தகுமாரி லிங்கநாதன், அர்ச்சனா காமராஜன், வளர் மதி ராம கிருஷ்ணன், கிருஷ்ண பிரசாத், அகிலன், இம்தியாஸ், ரத்தினவேல், அரசு வழக்கறி ஞர் அண்ணாமலை, வழக்கறி ஞர்கள் திருநாவுக்கரசு, தாம ரைச்செல்வன், சத்தியமூர்த்தி, முகமது பாஷா, அன்பழகன், ரமேஷ் குமார், ரவீந்திரன், தாமோதரன், அனைத்து பத்தி ரிகை துறை சார்ந்த நண்பர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். வேல்மயில் அனைவரையும் வரவேற்றார்.

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு-தயாநிதி மாறன் எம்.பி.- அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. முன்னிலை! வே.வாசு தலைமை!

## வில்லிவாக்கம் கிழக்கில் - ப.சிதம்பரம் எம்.பி. சிறப்புரை!

மார்க்சிஸ்ட் கே.பாலபாரதி - விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜூன் 14-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழகம் சார்பில் கலைஞர் 100 - 3- வது நிகழ்ச்சியாக “உழைப் புத் தந்த உயிர்ப்பு ஒன்றி யம் கண்ட வியப்பு” என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (14.6.2023 - புதன்கிழமை) மாலை 6 மணிக்கு போர்ச் சியஸ் சாலை - ஜாயிண்ட் ஆபிஸ் அருகில் அயன்புரத் தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமை வகிக்கிறார். மாவட்டக் கழகச் செயலா ளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., கூ.பி. ஜெயின், டி.வி.செம் மொழி, சாவித்திரி ஸ்ரீ வீர ராகவன், சுதா தீனதயாளன், வானவில் விஜய், லதா வாசு, எம். சுரேஷ், மு.முனிஸ் சுவாமி தாஸ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபிள்யூ அமுல், நா.அறிவுடை நம்பி, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை ஆகி யோர் முன்னிலை வகிக் கின்றனர்.

வி.சபாபதி, வ.ரமேஷ் பாபு, மு.பரமானந்தம், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்திய நாராயணன்ய, இ. ஜெய்சங்கர், ப.செந் தில் குமார், எஸ்.துரை பாபு, கே.ராஜா, வி.ஆர். ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்ற னர்.

இக்கூட்டத்தில் ஒன் றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், சி.பி.எம். கே.பாலபாரதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்று கின்ற னர்.

மேலும் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஜோசப் சாமு வேல் எம்.எல்.ஏ., இ.பரந் தாமன் எம்.எல்.ஏ., ப.ரங்க நாதன் உள்பட கழக முன்னணியி னர் தோழர் கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

96-வது வட்டச் செய லாளர் எ.வேதா நன்றி கூறுகிறார்.

---



நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் குறித்து நடைபெற்ற மாவட்ட அளவிலான விழிப்புணர்வு முகாமில் பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் வழங்கினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவணன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், நாகை சட்ட மன்ற உறுப்பினர் முகமதுஷநவாஸ், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஷ்வரி சங்கர், நாகை நகர்மன்றத் தலைவர் இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.